பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை 108 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:– திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.1565/2018/அ7 நாள்: 25 .02.2019

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தமிழ்நாடு பேரூராட்சி சார்நிலை பணி – சிறப்பு பணி விதிகள் – 01.01.2018ம் தேதிய நிலையில் செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)– க்கான தற்காலிக முன்னுரிமை பட்டியல் வெளியிடுதல் – ஆணையிடப்படுகிறது

பார்வை:
1. அரசாணை(ப) எண்.270 ஊரக வளர்ச்சி துறை , நாள் 4.4.1990
2. அரசாணை எண்.62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 18.04.2009
3. அரசாணை(ப) எண்.42 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 18.04.2012
4. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.6793/2009/அ7 நாள் 12.07.2013
5. பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.12592/2015/அ7 நாள் 21.04.2017 மற்றும் 03.02.2018
6. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.1565/2018–1/அ7, நாள் 06.07.2018 மற்றும் 13.07.2018
7. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.1565/2018/அ7 நாள்: 10.08.2018

*****

ஆணை :

பேரூராட்சிகள் நிர்வாகத்தில் அனைத்து செயல் அலுவலர் நிலையில் மாநில அலகு நிர்ணயம் செய்து பார்வை 1ல் காணும் தமிழ்நாடு பேரூராட்சி சார்நிலை பணி விதிகளுக்கு உரிய விதித்திருத்தங்கள் வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக பார்வை 4 மற்றும் 5ல் கண்டுள்ளபடி 04.04.1990 முதல் 01.01.2016ம் தேதிய நிலை வரை செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)–க்கான இறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 2016–2017ம் ஆண்டிற்கு தேர்ந்தோர் பெயர் பட்டியல் வரையறுக்கப்பட்டு அதனடிப்படையில் 01.01.2017ந் தேதிய நிலையில் முதல்நிலை செயல் அலுவலர் நிலையில் தற்காலிக முன்னுரிமை பட்டியல் பார்வை 7–ல் கண்டுள்ளபடி வெளியிடப்பட்டுள்ளது

இந்நிலையில் தற்போது 2017–2018ம் ஆண்டுக்கு செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்) பதவி உயர்வுக்கு தேர்ந்தோர்பெயர்பட்டியல் வரையறுத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பணியாளர்களுக்கு தகுதியறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் 2017–2018ம் ஆண்டு செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)க்கான பதவி உயர்விற்கு அரசின் விதித்தளர்வினை எதிர்நோக்கி தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலில் வரப்பெற்றுள்ள பணியாளர்களை உள்ளடக்கி 01.01.2018ம் ஆண்டிற்கு செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)க்கான தற்காலிக பட்டியலை காலதாமதம் தவிர்க்கும் பொருட்டு மற்றும் பதவி உயர்விற்கு பரிசீலிக்கப்படும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு

அளிக்கப்படுவதை எதிர்நோக்கி பணியில் மூத்த பணியாளர்கள் யாரேனும் தகுதி பெறின் அவர்களை பட்டியலில் சேர்த்திட ஏதுவாகவும் 2017–2018ம் ஆண்டிற்கு செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)க்கான பதவி உயர்விற்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு பரிசீலிக்கப்படும் பணியாளர்கள் (Perons to be considered for post of Executive officer Grade.I/ Accounts for the year 2017-2018 Tentative Panel) என குறிப்பிட்டு 01.01.2018ந் தேதிய நிலையில் செயல் அலுவலர் (நிலை–1) / (கணக்குகள்)க்கான தற்காலிக முன்னுரிமை பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு – 1ல் கண்டுள்ளபடி வெளியிடப்படுகிறது.

மேற்காண் முன்னுரிமை பட்டியலின் மீது ஆட்சேபணைகள் தெரிவிக்கும் பணியாளர்கள் தங்களது ஆட்சேபணை குறித்த மேல்முறையீட்டு மனுவினை இச்செயல்முறை ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் வழியாக இவ்வியக்ககத்திற்கு அனுப்பிட தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்காண் தற்காலிக முன்னுரிமை பட்டியல் பேரூராட்சிகள் துறை இணையதள முகவரியான **www.tn.gov.in/dtp** -ல் வெளியிடப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை பட்டியலினை சம்மந்தப்பட்ட ஒய்வு மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு தனித்தனியே சார்வு செய்து சார்வு நகலினை அனுப்பி வைக்க அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்க அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–சு.பழனிசாமி
இயக்குநர்

இணைப்பு–1

பெறுநர்

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்
(சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வழியாக)

நகல் – 1. சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
2. சம்மந்தப்பட்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
3. அ7 இருப்பு கோப்பு

/உத்திரவுப்படி/

25/2/19
இயக்குநருக்காக

25/02/19.